Distribution of rice.

* 82 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(a) whether first sort rice was distributed as second sort rice in Madras City in October 1968;

(b) the quantity of rice so distributed; and

(c) the loss incurred thereby?

அரிசி வினியோகம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 1968 அக்டோபரில் சென்னை நகரில் முதல்தர அரிசியை இரண்டாம் தர அரிசி என வினியோகிக்கப்பட்டதா ?

(இ) எவ்வளவு அரிசி வினியோகிக்கப்பட்டது ?

(உ) அதனால் எவ்வளவு நட்டம் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம். முதல் தர புழுங்கல் அரிசி இரண்டாந்தர விலைக்கு வினியோகிக்கப்பட்டது.

(இ) 9,286 டன் அரிசி வினியோகிக்கப்பட்டது.

(உ) அப்படி விற்றதினால் அரசுக்கு ஒரு டன்னுக்கு ரூ. 46.50 நஷ்டம் ஏற்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த சென்னை நகரத்திலுள்ள பாக்கியசாலிகளுக்குத் தேர்தல் வரும் போதெல்லாம் முதல் தர அரிசி இரண்டாம் தர அரிசியாக விற்கும் படி இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. ராஜ்யத்திலுள்ள மற்றவர்களுக்கும் இந்த பாக்கியத்தை அரசு உண்டாக்காதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் எதிர்க் கட்சித் தலைவர் அதற்கு அரசியல் நோக்கம் கற்பிக்கிறார்கள். உண்மை அதுவல்ல. குறுவை அறுவடையாகி வருவதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் அதைச் செய்யாவிட்டால், ‘படி அரிசி ரூபாய்க்கு என்று சொல்லிவிட்டு கைவிட்டு விட்டார்களே என்று குறை கூறுவார்கள்’ என்றுதான் எப்படியும் அந்த விலைக்குப் போடவேண்டுமென்று அப்படிச் செய்யப்பட்டது.

Hospitals visited by the Public Health Minister.

* 83 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state :

(a) the number of hospitals visited suddenly by the Public Health Minister from 6th March 1967 to 31st December 1968; and

(b) the defects found by him during the visits?

சுகாதார அமைச்சர் பார்வையிட்ட மருத்துவ மனைகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 6-3-1967 முதல் 31-12-1968 வரை பொதுச்சுகாதார அமைச்சர் அவர்கள் எத்தனை மருத்துவமனைகளுக்குச் சென்று திடீரென்று பார்வையிட்டார் ?

(இ) அதில், அவர் கண்ட குறைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) திடீரென்று பார்வையிடப்பட்ட மருத்துவமனைகளின் கணக்கு வைக்கப்படவில்லை.

(இ) பொதுவாக உள்ள நிலைமைகள் நேரில் கண்டறியப்பட்டு குறைகள் நீக்க முயற்சிக்கப்படுகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, குறிப்பாக பெரிய தலைநகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் உள்ள குறைகள் எண்ணில் அடங்காது, ஏட்டில் எழுதமுடியாது. நான் ஜனவரி முதல் தேதி என்னுடைய பிளட் டெஸ்ட் செய்து, ஒரு எக்ஸ்ரே படம் எடுத்தேன். இப்போது மார்ச் மாதம் 1-ம் தேதி, இன்றைக்கு காலையில் பத்துப் பதினைந்து தடவை ஆஸ்பத்திரிக்கு அலைந்து கண்டுபிடித்தேன். சட்டமன்ற உறுப்பினருக்கு இந்த நிலையிருக்கிறது. அதில் இன்னொன்று என்னவென்றால் நான் அன்று எடுத்த எக்ஸ்ரே படம் எங்கே என்றே தெரியவில்லை. காணமற் போய்விட்டது. இன்று ஜெனரல் ஆஸ்பத்திரி ஒரு குட்டி கார்பரேஷனகவே இருக்கிறது. 25 ஆயிரத்திற்கு மேல் மக்கள் சுற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். யார் என்ன அங்கே செய்கிறார்கள் என்று தெரியாமல் இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி நல்ல முறையில் செயல்படும் வகையில் சுகாதார அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : முயற்சிகள் நிச்சயமாக எடுத்துக் கொள்வோம். எக்ஸ்ரே எடுத்த உடனேயே அங்கேயிருந்து அதைப் பார்த்திருந்தால் கிடைத்திருக்கும் ஜனவரி முதல் தேதி எடுத்துவிட்டு பிப்ரவரியில் கேட்டால் அதைத் தேடவேண்டி வந்திருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நேற்றைய தினம் சென்னையிலுள்ள மருத்துவ மனைக்குச் சென்று நேற்று ஒரு எக்ஸ்ரே எடுத்தேன். நேற்று மாலையே அது எனக்குக் கிடைத்தது. இன்றைக்கு மாலை அந்த டாக்டரைப் போய்ப் பார்க்க இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்)

திரு. எம். எத்திராஜுலு : சார், சென்ற ஆண்டு சுகாதார அமைச்சர் அவர்கள் கடலூருக்கு வந்த பொழுது அங்குள்ள மருத்துவ மனைக்குத் திடீரென்று விஜயம் செய்ததாகப் பத்திரிகையில் வந்தது. அது உண்மையா ? அப்படியில்லையென்றால்

1st March 1969]

பத்திரிகையில் உண்மையான விஷயங்களைப் போடும்படி செய்வார்களா ? அமைச்சர் அவர்கள் அப்படிப் பத்திரிகையில் போட்டது தவறு என்றுவது சொல்லவேண்டும். அமைச்சர் போய் பார்த்தால் நன்றாக நடக்கும் என்று நினைத்தோம். இப்போதுதான் அவர் போகவில்லை என்று தெரிகிறது.

Music Teacher Post.

* 84 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the post of the Music Teacher in the Savithiri Vidyasala Hindu Girls' High School, Tiruchirappalli, has been declared a "surplus" one and abolished; and

(*b*) if so, the details thereof?

இசை ஆசிரியைப் பதவி

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள சாவித்திரி வித்யாசாலை இந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலுள்ள இசை ஆசிரியைப் பதவி உபரியென அறிவித்து நீக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) & (இ) இப்பள்ளியின் இசை ஆசிரியர் பதவிகள் நான்கில் ஒரு பதவி மிகுதியாக இருந்தது. அப்பதவி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென பள்ளி நிர்வாகிகள் செய்துள்ள முறையீடு ஆய்வில் உள்ளது.

Ex-District Board Headmasters.

* 85 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Ex-District Board Headmasters' Association has made a request for treating the Ex-District Board teachers as Government Officials; and

(*b*) whether the Association has requested the Government to convert the posts of Headmasters into Gazetted Officers?

முன்னாள் மாவட்ட வாரிய தலைமை ஆசிரியர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) முன்னாள் மாவட்ட வாரிய தலைமை ஆசிரியர்கள் சங்கம் முன்னாள் மாவட்ட வாரிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றும்படி வேண்டுகோள் விடுத்ததா ?